# சித்தர்களின் தத்துவங்கள்

முனைவர் சு. மலர்விழி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டூர் அணை – 636401
malarvizhisureshkumar74@gmail.com

40

**ஆய்வுச் சுருக்கம்** :

சித்தர்கள் யார்? என்பதனையும்; பண்டைய காலத்தில் வாழ்ந்த சித்தர்களின் சிறப்புகளையும்; பேரறிவு படைத்த சித்தர்கள் அறிந்த எண்வகை சித்திகள் பற்றியும்; பாம்பாட்டி சித்தர், திருமூலர், சிவவாக்கியர் பாடல்களையும்; சித்தர்களின் சிந்தனை கோட்பாடுகளையும் இக்கட்டுரையின் வழியாக எடுத்துச் சொல்லப்படுகிறது.

**திறவுச் சொற்கள்** :

அட்டமாசித்திகளையும்; பாம்பாட்டி சித்தர் பாடல்களில் “ஓடி திரிவதினால் ஒரு பயனும் இல்லை” என்ற கருத்தினை மையப்படுத்தியும்; “உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!” என்ற வரிகளில் தொடங்கும் திருமூலர் பாடல்களையும்; சிவபெருமான் பற்றி கூறும் சிவவாக்கியர் பாடலையும் எடுத்துக்காட்டி இக்கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன்.

**முன்னுரை**:

சித்தர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள் என்று கருதுகின்றனர். சரித்திர ஆசிரியர்கள் சிலர், சித்தர்கள் காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு என்று குறிப்பிடுகின்றனர். 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய சித்தர்கள் சமயங்களைப் பொதுமை உணர்வுடன் அணுகினர். அவர் தம் படைப்புகளில் கடவுளின் பெயரால் நிகழும் சடங்குகளைக் கண்டித்தும், உருவ வழிபாட்டை மறுத்தும், சமூக ஏற்றத்தாழ்வை நீக்கவும் பாடல்களை இயற்றினர். 19 ஆம் நூற்றாண்டில் உலகியலில் சமய, சமூக, பொருளாதார மறுமலர்ச்சியை எடுத்துக் கூறியவர் வள்ளலார். இன்றைய அறிவியல் கண்ணோட்டத்தோடு சமயத்தை இடைக்காலத்தில் நோக்கியவர்களும் உண்டு. இவர்கள் அறிவாளரென்றும் சித்தரென்றும் போற்றப்படுகின்றனர். பிராணயாமத்தின் மூலம் உயிரைக் கட்டுப்படுத்தி நெடுங்காலம் வாழ்வதற்கு முயன்றார்கள். இரசவாத முறையில் இறந்த உடலைப் பாதுகாக்கவும் சித்துக்களை விளைவிக்கவும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

**“கறந்த பால் முலைபுகா, கடைந்த வெண்ணெய்**

**மோர்புகா, ஆதலால் இறந்தவர் பிறப்பதில்லை**
**யில்லை யில்லை யில்லையே”**

என்று பாடுகின்ற, சிவவாக்கியர் பாடல் மண்குடமாகி, குடம் மீண்டும் மண்ணாகின்ற இயற்கைத் தத்துவமான பொருள் முதல் வாதத்தைச் சுட்டிக் காட்டுகிறது. சித்தர்கள் இலக்கியங்களில் வேதங்களையும், வேத புராணங்களையும் நால்வகை வருணப்பாகுபாடுகளையும், சாதி அமைப்புகளையும் தாக்கிப் பாடிய பாடல்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. சித்தர்கள் மக்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் ஆகிய எண்ணங்களைப் போக்கி சமரசக் கருத்துக்களைப் பரப்ப முயன்றார்கள். சமயத்துக்குள் மறுமலர்ச்சியைப் புகுத்தினார்கள். சித்தர்களின் வைத்திய நூல்கள், அவர்களின் தத்துவங்கள் ஆகியன நம் முன்னோர்கள் நமக்குச் சேமித்து வைத்திருக்கும் ஒப்பற்ற உயர்ந்த செல்வங்களாகும். சித்தர் வைத்திய சிறப்பையும், சித்தர்களின் தத்துவங்களையும் தமிழ் மக்கள் உணர வேண்டும் என்றும்; அவற்றை வளர்க்க வேண்டும் என்ற கருத்துடனேயே இக்கட்டுரை வழங்கப்படுகிறது.

**சித்தர்கள் யார்?**

சித்தர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் சாகாநிலையைப் பெற்றவர்கள் ஆவர். அழியாத உடம்பையும்; உடம்பை அழிந்து போகாமல் பாதுகாக்கும் வழிமுறையினையும் அறிந்தவர்கள் சித்தர்கள். பல அற்புதங்கள் நிகழ்த்தக் கூடிய பல மாய வித்தைகளையும் தன்னகத்தே உள்ளடக்கிய மாமனிதர்களை சித்தர்கள் எனலாம். சித்தர்களின் பெருமை பல புராணங்களில் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சித்தர்கள் பற்றி அறிந்தவர்கள் சிலர்தான். சித்தர்கள் கண்டறிந்த வைத்திய முறையே சித்த வைத்தியமாகும். சித்த வைத்தியர்கள் எல்லோரும் பெரும்பாலும் சித்தர் நூல்களை படித்தவர்களாக இருப்பர். இவர்கள் சித்தர்களின் கொள்கைகளை முழுமையாக அறிந்து விட முடியாது. தமிழ்நாட்டில் சித்தர்களின் வைத்திய நூல்களை பற்றியும், சித்தர்களின் பாடல்கள் பற்றியும் படித்தறிந்தவர்கள் ஒரு சிலர் தான் உண்டு. அவர்களால் தான், சித்த வைத்திய முறையானது இன்றும் மறையாமல் உயிருடன் உலவி கொண்டிருக்கிறது. “சித்தம்” என்றால் “அறிவு”. ஆகவே, சித்தர்கள் பேரறிவு படைந்தவர்கள் . பொது மக்களால் செய்ய இயலாத பல அறிய செயல்களை செய்பவர்கள் என்பதில் ஐயம் இல்லை.

**சித்தர்களின் சிறப்பு :**

- சாகா நிலை பெற்ற சித்தர்கள் தன் உடம்பை அழிந்து போகாமல் பாதுகாக்கும் வழிமுறையை அறிந்தவர்கள்.
- எந்நிலையிலும் அழியாத உடம்பினைப் பெற்றவர்கள் சித்தர்கள்.
- தன்னுடைய உடம்பை ஒரு நிலையில் வைத்துவிட்டு மற்றொரு உடம்பில் புகுந்து நடமாடும் சக்தியைப் படைத்தவர்கள். இவற்றை "கூடு விட்டு கூடு பாய்தல்” என்றும்

அழைப்பர். தன் உடலை விட்டு உயிரை பிரித்து மற்றொரு உடலில் புகுத்துவதை இவ்வாறு அழைப்பர்.

- முக்காலங்கள் பற்றி அறியும் சக்தி பெற்ற ஞானிகள் சித்தர்கள்.
- யோக மார்க்கத்தில் நின்று வெற்றி பெற்றவர்கள்.
- சித்தி பெற்றவர்களை சித்தர்கள் என்று அழைத்தனர்.

**எண்வகை சித்திகள்:**

1. அணிமா - அணுவை காட்டிலும் மிகச்சிறிய உருவிலே உலவும் ஆற்றல்.
2. மகிமா - மலையினும் பெரிய உருவம் பெற்று நிற்கும் ஆற்றல்.
3. லகிமா - உடம்பை கனமானதாக இல்லாமல் இலேசானதாக மாற்றும் தன்மை (ம) நீர், சோறு அருந்தாமல் காற்றை போல விரைந்து செல்லும் வல்லமை கொண்ட ஆற்றல்.
4. பிராத்தி - தான் எதை விரும்பினாலும், நினைத்தாலும் அவற்றை அடையும் வல்லமை பெற்றது.
5. பிராகாமியம் - தன் தினைப்பின் வல்லமையாலும் ஆற்றலாலும் அணைத்தையும் படைக்கும் சக்தி.
6. ஈசத்துவம் - எல்லோரும் தன்னை வணங்கும்படியான தெய்வ தன்மை அடைதல்.
7. வசித்துவம் - உலகம் முழுவதையும் தன் வசப்படுத்தி நடத்தும் ஆற்றல்.
8. கரிமா - ஐம்புலன்கள் நுகரும் இன்ப துன்பங்கள் பற்றி கவலைப்படாமல் இருப்பதுள்.

இத்தகைய வல்லமை கொண்ட ஆற்றலுடைய சக்திகளை "அட்டமாசித்தி" என்பர்.

**சித்தர்களின் சிந்தனைக் கோட்பாடுகள் :**

சித்தர்களின் சிந்தனைக் கோட்பாடுகள் இந்த உலகைக் கவர்ந்திருக்கின்றன. அவை சிவம் என்ற பகுப்பாலும் சக்தி என்ற பகுப்பாலும் குறிக்கப்படுகின்றன. பொருளுக்கு சக்தியும், சக்திக்குப் பொருளுமின்றி உலகின் இயக்கம் தொடரமுடியாது. இந்த செவ்விய சிந்தனைக் கோட்பாட்டை வையத்திற்கு வழங்கியவர்கள் நம் சித்தர்களே ஆவார்கள், இவர்கள் மூதுலகின் மூத்த நாகரிகம் கொண்ட தென்தமிழ் நாட்டில் தோன்றி எகிப்து முதலிய நாடுகளுக்குச் சென்றனர். அங்கு ஆண்ட அரசர்களால் பெரிதும் சித்தர்கள் மதிக்கப்பட்டார்கள்.

**சித்தன் போக்கு சிவன் போக்கு :**

சித்தர்களின் தேவைகள் மிகமிக அற்பமாகவே இருந்திருக்கின்றன. சித்தர்களின் போக்கும் நோக்கும் தனித்ததாகும்.

**“உடைகோ வணம் உண்டு உறங்கப் புறந்திண்ணையுண்டு**
**அடைகாய் இலையுண்டு அருந்தத் தண்ணீர்**
**உண்டு வனவிலங்கு அருந்துணைக்கே**
**விடையேறும் ஈசன்திரு நாமம் உண்டு இந்த மேதினியில்**

**வடகோடு உயர்ந்தென்ன? தென்கோடு**

**சாய்ந்ததென்ன? வான் பிறைக்கே"**

ஓடுண்டு கந்தையுண்டு. ஓது அய்ந்தெழுத்துண்டு என்று நிறைந்த நிலையில் வாழ்ந்த அவர்கள் தெளிந்த நிலையில் தேடியதெல்லாம் பரம்பொருளையே எனவே தன் நம் முன்னோர்கள் சித்தன் போக்கு சிவன் போக்கு என்றார்கள்.

**பாம்பாட்டி சித்தர் பாடல்கள்** :

சித்தர்கள் எல்லாம் வல்லவர்கள்; அவர்களால் எதையும் செய்ய முடியும்; என்று தலைநிமிர்ந்து பேசுகிறார் பாம்பாட்டிச் சித்தர்; இவரைப் போலவே வேறு எந்தச் சித்தரும் பாடவில்லை.

**ஆதிசேடன் ஆகிலுமே அங்கையி னாலே**

**ஆட்டிவிடு வோம்எங்கள் ஆக்கினைக் குள்ளே ;**

**நீதியோடு அடங்கியே நின்றிடச் செய்வோம்;**

**நின்றநிலை தவறாமல் ஆடு பாம்பே ;**

**செப்பரிய மூன்றுலகம் செம்பொன் ஆக்குவோம்!**

**செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்து விடுவோம்;**

**இப்பெரிய உலகத்தை இல்லாமல் செய்வோம்;**

**எங்கள்வல் லபம்கண்டு ஆடுபாம்பே!**

**- (பாம்பாட்டி சித்தர் பாடல்)**

என்று பாடியிருக்கும் பாடல்களிலே சித்தர்களின் சிறப்பைக் காண்கிறோம்.

எவ்வளவு பெரிய கொடுமையையும் எங்களால் அடக்கிவிட முடியும். இவ்வுலகிலே நீதியை நிலைநாட்ட முடியும்." என்பது முதற் செய்யுளின் உட்பொருள். "மூன்றுலகத்தையும் இன்பமடையச் செய்வோம். இப்பெரிய உலகிலே எக்கொடுமையும் இல்லாமல் செய்வோம் " என்பது இரண்டாவது செய்யுளின் உட்பொருள்.

இத்தகைய சிறந்த கருத்துள்ள பாடல்களை இயற்றியவர் பாம்பாட்டிச் சித்தர். அவருடைய வரலாற்றை அறிவதற்கான சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் அவர் பாடல்கள் சிறந்த சுவையுடையன ; வாழ்வுக்கு வழிகாட்டுவன என்பதில் ஐயமில்லை.

**ஓடி திரிவதால் ஒருபயனும் இல்லை :**

**"காடு மலை நதிபதி காசி முதலாய்க்**

**கால்கடுக்க ஓடிப்பலன் காணல் ஆகுமோ?**

**வீடுபெறும் வழிநிலை மேவிக் கொள்ளவே**

**வேதாந்தத் துறையினின்று ஆடாய் பாம்பே! "**

- (பாம்பாட்டி சித்தர் பாடல்)

காடு, மலை, ஆறு, புண்ணியத் தலம், காசி முதலாகச் சொல்லப்பட்ட இடங்களுக்குப் போவதனால் ஒன்றும் இல்லை; கால்கடுக்க இவ்விடங்களுக்கு ஓடிச்செல்வதால் பலன் ஒன்றையும் காணமுடியாது. இதனால் வீடுபெறும் மார்க்கத்தைக் கண்டறிய முடியாது. வீடு பெறும் சிறந்த வழியை அடையவேண்டுமானால், வேதாந்தத் துறையை அறிந்தால்தான் முடியும். ஆதலால் பாம்பே வேதாந்தத் துறையை அறிந்துநின்று ஆனந்தமாக ஆடுவாயாக" என்று பாடுகிறார்.

வீடுபெறுவதற்குரிய அந்த வேதாந்தத் துறை யாது என்பதையும் விளக்கியிருக்கிறார் சித்தர்.

**“ எள் அளவும் அன்பகத்தில் இல்லாதார் முத்தி**
**எய்துவது தொல் உலகில் இல்லை எனவே**
**கள்ளப்புலன் கட்டறுத்துக் கால காலனைக்**
**கண்டுதொழு தேகளித்து ஆடாய் பாம்பே.”**

(பாம்பாட்டி சித்தர் பாடல்)

எல்லாவுயிர்கள்பாலும் இரக்கம்கொள்ளுவது; ஐம் புலன்களைக் கட்டுப்படுத்தி ஆளுதல். அதாவது ஐம்புல ஆசைகளை அறுத்தல்" இதுவே வேதாந்தத் துணிவாகும். இக்காரியத்தைச் செய்தவர்கள் என்றும் ஆனந்தத்துடன் வாழலாம்; சிவத்துடன் ஒன்றுபட்டு வாழலாம்; என்று பாடியிருக்கிறார். உள்ளத்திலே எள்ளளவாவது அன்பில்லாதார் முத்தி அடைய முடியாது; அன்பற்றவர்கள் நல்ல செயல்களைச் செய்யமாட்டார்கள்; கொடுமைகளைத்தான் செய்வார்கள். ஆதலால் அவர்கள் முத்திநிலையை எட்டிப் பார்க்கவே முடியாது. அன்பில்லாதவர்கள் முத்தியடைவது என்பது பண்டைக்காலத்திலும் இல்லை; இக்காலத்திலும் இல்லை; எக்காலத்திலும் இல்லை. ஆதலால் முத்தி அடைய வேண்டுமானால், உலகத் துன்பங்களிலிருந்து விடுதலை பெறவேண்டுமானால் - வஞ்சகப்புலன்களின் ஆசையை அறுக்கவேண்டும்; அப்புலன்களுக்குக் கட்டுப்படாமல் எமனுக்கு எமனாயிருக்கம் சிவபெருமானைக்

காண்பாயாக. பாம்பே! அவனைக் கண்டு தொழுது களித்து ஆடுவாயாக" என்று பாடியிருக்கின்றார்.

**திருமூலர் பாடல்கள்** :

மனம் ஒரு கண்ணாடி போன்றது கண்ணாடி காட்டும் உருவங்களை கண்ணாடி உடைந்தால் உவமும் உடையும். அதைப்போல் உடல் அழிந்தால் மனமும் அழியும் மனமும் உடலும் இணைந்து செயல்படும் நிலையில்தான் மனிதனால் சிறப்பாக இயங்க முடியும். எனவே தான் உடலோம்பலின் அவசியத்தை திருமூலர்,

**" உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே "**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே! "** (திருமந்திரம் 704)

என்று பாடுகிறார். உடலை வளர்த்துத்தான் உயிரை வளர்க்க முடியம். எனவே உடலை போற்றி பாதுகாத்தல் அவசியம் என்கிறார். காரணம் சிலர் இந்த உடலை இழிந்தும் பழித்தும் பேசினர். அந்தக் காலகட்டத்தில் உடம்பின் சிறப்பை இவர் பாடியிருப்பது எண்ணத்தக்கது.

**சிவவாக்கியர் :**

சமுதாயத்தில் உழைக்காமல் வீணில் உண்டுகளித்திருக்கும் மக்கள் நேமங்கள். நிட்டைகள். வேதங்கள், ஆகமங்கள் என்று கூறி அந்தியிலும் சந்தியிலும் ஜெபங்கள் செய்வதால் சமுதாயத்தில் தாங்களே உயர்ந்த சாதி என்று சொல்லிக்கொண்டு சமுதாயத்தை ஏமாற்றுவதை இவர் சாடுகிறார்.

நீராடி, வேடங்கள் புனையாமல் நித்தம் நித்தம் வேர்வையால் தங்களைக் குளிப்பாட்டிக் கொண்டு உழைக்கும் மக்கள் தாழ்த்தப்படுவதை இவர் நேரிடையாகவே தன் பாடல்களால், எதிர்கின்றார்.

உலகியலை நன்குணர்ந்த பார்வையில் எதையும் தெளிவாகவே விளக்குகிறார். இறைவன் உட்கலந்த சோதியாக நம்முளே நடம்புரிய அவனைப் புறத்தே தேடித் தேடி அலைந்து கெட்டவர்களை

**"ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை**
**நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்துபோய்**
**வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்கள்**
**கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே"** (சிவாவாக்கியம்-3)

புறத்தே அலைந்து அவனைத் தேடுவதை விட்டு விட்டு இறைவனை உங்களுக்குள்ளேயே தேடுங்கள் என்பது அவரின் குறிப்பாக அமைகிறது.

உயர்ந்த ஞானநிலை என்பது இறைப் பேருணர்வில் தன்னுள் இறைவனைத் தேடுதலாகும். இதன்வழி தன்னையும் உணர்ந்து கொள்ள முடியும் தன்னில் தன்னைக் காணும் ஆற்றலே பெருந்தவ ஆற்றலென்பதை அதிகம் வலியுறுத்தியுள்ளார். 'அந்தர் முக தரிசனம்' என்று இக்காட்சியை உணர்த்துகின்றார்கள். இதனை.

**"என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே**
**என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்**
**என்னிலே இருந்த ஒன்றை யாவர் காணவல்லரோ**
**என்னிலே இருந் திருந்துயான் உணர்ந்து கொண்டேனே"**

(சிவவாக்கியம்-6)

இந்தப் பெருநிலை அனுபவமே சித்தரியலில் முதன்மை கொண்டதாகும் தன்னுள் தன்னைக் காணும் பெற்றி பெரியது. கோழி அடை காப்பதுபோல தன்னள்ளே தன்னை அடக்குதல் எவ்வளவு கடினம், உள்ளார்ந்த இந்த உயர்ந்த அனுபவ சித்தி பெற்றுவிட்டால் இறை ஞானமும் இறைப்பற்றும் இதில் அடங்கிவிடுகிறது இந்த உட்பொருளை அனைவருக்கும் உணர்த்துகிறார். உள் உணர்வு, உள்ளொளி ஆகியவையே இறைவனை உணர்த்தும் என்கிறார்.

**சாதிய எதிர்ப்பு :**

தமிழ்ச்சமுதாயம் அன்றுமுதல் இன்றுவரை ஒன்றுபட முடியாத நிலையில் இயங்கிக் கொண்டிருப்பதற்குச் சரியான காரணம் சாதிய அமைப்புகளே என்பதைச் சொல்லத்தேவையில்லை. பாரதிதாசன் அவர்கள் இந்நாட்டு நிலையை வருணிக்கும் பொழுது,

**“வாழ்கின்றார் முப்பது கோடி மக்களென்றால்**

**சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்”** என்பார்.

ஏற்றத் தாழ்வு நிறைந்த, பேதம் நிறைந்த சாதி முறையை மாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் சித்தர்கள் சாதி மதப் பிரிவுகளை மிகவும் கடுமையாகவே எதிர்த்துள்ளார்கள்.

திருவள்ளுவர்,

**“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”**

என்றார்.

மனிதகுல முழுமைக்கும் பிறப்பு ஒன்றே எல்லோரும் ஒரே குலம் ஒரே இனம். இத்தகைய பொதுமை உணர்விற்கு உரியவர்கள் சித்தர்களே. அத்தகைய சித்தர்களுள் சிவவாக்கியர் மனிதகுலப் பொதுமையைப் பெரிதும் வேண்டியவராகவே விளங்குகின்றார்.

முடிவுரை :

சித்தர்கள் என்ற சொல்லிற்கு சித்தத்தை அறிந்தவர்கள் என்று பொருள். சித்-அறிவு. உடம்பிற்குள் 96 வகையான வேதியியல் தொழில்கள் நடைபெறுகின்றன என்ற உண்மையை (அறிவியலை) அறிந்தவர்கள் சித்தர்கள். அதை சித்தர் தத்துவங்கள் என்ற பெயரில் அழைத்தனர்.

நவீன மருத்துவ முறையில் உடற்கூற்றுத் தத்துவங்கள் பல பெயர்களில் அழைக்கப்பட்டாலும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ச் சித்தர்கள் இத்தத்துவங்களை தம் உடலையே சோதனைச் சாலையாக்கி அறிந்து, ஆன்மீகப் பெயர்களில் இவற்றை அழைத்துள்ளனர். மனித உடல் இயங்கும் விதத்தை 96 வகையான தத்தவங்களின் அடிப்படையில் சித்தர்கள் பகுத்தனர்.

**துணை நூல் பட்டியல் :**

- **சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம் - நாம் தமிழர் பதிப்பகம், சென்னை**
  (தமிழறிஞர் சாமி சிதம்பரனார்)
- **முற்போக்கு சிந்தனையில் சித்தர்கள். -அருள் பதிப்பகம், சென்னை**

(டாக்டர். சு. குணசேகரன்)